அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# *POTHIKAIMALAIYIN AAIANDIRAN*

***Dr D. Muthulakshmi****, Assistant professor, Department of tamil, Shrimathi devkunvar Nanalal Bhatt Vaishnav college for women, Chromepet, Chennai-44, https://orcid.org/0000-0003-4326-1326*

***Abstract;***

*The Western Ghats, the pride of South India, are a mountain range located in the western part of India. The Western Ghats block the cold winds coming from the Arabian Sea in the west and bring rain to Kerala and other parts of the western coast located on its upper reaches. The Western Ghats are one of the eight places in the world with the richest biodiversity. About 5000 species of flowering plants, 139 species of mammals, 508 species of birds, and 176 species of amphibians are found here. The mountain, which was called Pothiyam and Pothiyil during the Sangam period, is now called Pothikaimalai.The Himalayas in the north and the Pothikaimalai in the south are the high mountain ranges that the Tamils visited. This research article aims to explain about the kings who ruled the Pothikai mountain, the special one (aaiandiran king)among them, and about the Pothikai mountain, which is a part of the Western Ghats.*

***Keywords****: Agasthiyar Hill, Pothiyam, Aajilela, Valla, Sangam period*

# பொதிகைமலையின் ஆயண்டிரன்

**முனைவர் த. முத்துலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சுயநிதிப்பிரிவு, ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி ,குரோம்பேட்டை, சென்னை-44

**ஆய்வுச்சுருக்கம்**

தென்னிந்தியாவின் பெருமைக்குரிய மேற்குத் தொடர்ச்சி மலை என்பது பாரத நாட்டின் மேற்கு புறத்தில் அமைந்துள்ள ஒரு மலைத்தொடர் ஆகும். மேற்குத்தொடர்ச்சி மலை, மேற்கு பகுதியில் உள்ள அரபிக்கடலில் இருந்து வரும் குளிர்ந்த காற்றைத் தடுத்து அதன் மேற்பகுதியில் அமைந்துள்ள கேரளா மற்றும் பிற பகுதிகளில் மேற்கு கடற்ரையில் மழையைத் பொழிகின்றது. உலகில் பல்லுயிர் வளம் மிக்க எட்டு இடங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் ஒன்றாகும். இங்கு சுமார் 5000 வகை பூக்கும் தாவரங்களும், 139 வகை பாலூட்டிகளும், 508 வகை பறவைகளும், 176 வகை இருவாழ்விகளும் காணப்படுகின்றன. சங்க காலத்தில் பொதியம் என்றும், பொதியில் என்றும் வழங்கப்பட்ட மலையை இக்காலத்தில்

பொதிகைமலை என்றும் கூறுவர். வடக்கில் இமயமலையும், தெற்கில் பொதியமலையும் தமிழர் சென்று கண்டு வந்த ஓங்கி உயர்ந்த மலைத்தொடராகும். பொதிகை மலையை ஆட்சி செய்த மன்னர்களைப் பற்றியும், அவர்களுள் சிறப்புப் பொருந்திய ஆயண்டிரன் பற்றியும் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகிய பொதிகை மலைப்பற்றியும் விளக்குவதாக இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** அகத்தியர் மலை ,பொதியம், ஆய்வேள், வள்ளல், சங்க காலம்

**முன்னுரை:**

மேற்குத்தொடர்ச்சி மலைகளில், தென் திசையில் பெருமை பெற்று, சீருற்று திகழும் தென்னகத்திற்கு உயர்வினைத் தரும் ஆனைமலைத் தொடரில் பொதிகை மலை அமைந்துள்ளது. இம்மலைக்கு **அகத்தியர் மலை** என்று மற்றொரு பெயரும் உண்டு. இம்மலை தொல் பழங்காலத்தில் **பொதியம், பொதியில்** என்றும் அழைக்கப்பட்டது. வடக்கில் இமயமலையும், தெற்கில் பொதியமலையும் தமிழர் வெற்றிக்கொண்டு ஆட்சி புரிந்த உயர்ந்த மலைத்தொடர்களாகும். பொதிகை மலையை ஆட்சி செய்த ஆய், தியன், நெடுஞ்செழியன் மன்னர்களைப் பற்றியும், மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகிய பொதிகையின் சிறப்பைக் கட்டுரைப்பது ஆய்வின் பணியாக அமைகின்றது.

**மேற்குத்தொடர்ச்சி மலை**

மேற்கு மலைத்தொடர்ச்சி மலை கர்நாடகத்தில் சாயத்ரி மலைத்தொடர் என்றும் தமிழகத்தில் ஆனைமலை, நீலகிரி மலைத்தொடர் எனவும், கேரளாவில் மலபார் பகுதி, அகத்திய மலை எனவும் பெயர் வழங்கப்படுகிறது.

தென் இந்தியாவின் பல முக்கிய ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உருவாகுகின்றன. இங்கு உருவாகி கிழக்கு நோக்கி தக்காண பீடபூமி வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. மேற்கு மலைத்தொடர்ச்சி ஆறுகளாகக் கோதாவரி, கிருட்டிணா, காவிரி மற்றும் தாமிரபரணி ஆறுகளைக் குறிப்பிடலாம். கோவையில் சிறுவாணி, பவானி, நொய்யல் என நதிகள் பிறக்கின்றன. இவைத் தவிர பல சிறு ஆறுகள் இம்மலைத்தொடரில் உருவாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன. புவியியல் இரீதியாக மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடர் அரபிக்கடலிற்கு அருகில் அமைந்துள்ளதால் மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் சிறிய ஆறுகளேயாகும். அவற்றுள் சில முல்லை பெரியாறு, சிட்லாறு, பீமா ஆறு, மணிமுத்தாறு, கபினி ஆறு, கல்லாவி ஆறு, பெண்ணாறு மற்றும் பெரியாறு ஆகும்.

**பொதிகைமலை:**

மேற்குத்தொடர்ச்சிமலையின் தென்பகுதியில் பொதிகை மலை அமைந்துள்ளது. இதற்கு **அகத்தியர் மலை** என்று மற்றொரு பெயரும் உண்டு. பொதிகைமலை கேரளாவின் திருவனந்தபுரம் மாவட்டத்திலும், மறுபகுதி தமிழகத்தின் திருநெல்வேலியிலும் அமைந்துள்ளது. இதன் உயரம் 1,866 மீட்டர்கள் ஆகும். இந்த மலையிலிருந்துதான் தமிழ்நாட்டின் முக்கிய நதியான தாமிரபரணி ஆறு உருவாகிறது. பொதிகை மலையானது பசுமை மிகுந்த காடுகள், நீர் வீழ்ச்சிகள், ஆறுகள் கொண்டு, மூலிகைகள், மருத்துவத் தாவரங்கள், விலங்குகள் என பலவும் பெற்று **பல்லுயிர் வேற்றுமை மண்டலமாகத்** திகழ்கின்றது.

**பொதிகை மலையை ஆட்சி செய்த மன்னர்கள்**

சங்ககாலத்தில் தென்றல் உலாவும் தென் மலையாம் பொதிகை மலையை ஆட்சி செய்து பேரும் புகழும் பெற்ற தமிழ் மன்னர்கள் பலர். அவர்களுள் இலக்கிய சான்றுகளால் அறியப்படுபவர்கள் கடையேழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் அண்டிரன். சிற்றரசர்களுள் ஒருவர் திதியன். படையெடுத்துச்சென்று பகைபல வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்றோர் ஆவர்.

தென்னிலமாம் பொதியமலைச் சாரலில் உள்ள ஆய்க்குடியைத் தன்னிகரில்லாத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் **ஆய்வேள் என்ற கடையேழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் ஆண்டிரன்.** இவர்தம் நாடு இவர் பெயரால் ஆய்க்குடி என அழைக்கப்பட்டது. பிற்காலச் சோழர்களின் காலத்தில் தமிழகத்தின் கன்னியாகுமரி, கேரளாவின் கொல்லம், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்தது ஆய்நாடு. சில காலம் வரை ஆய்க்குடி கேரளாவின் ஒரு பகுதியாகவும் இருந்தது.

**சங்க இலக்கியத்தில் பொதிகைமலை**

சங்க இலக்கியங்களில் பொதிகை மலைப் பற்றிய சான்றுகள் பல உள்ளன. பொதிய மலை எல்லை, ஆட்சி செய்த மன்னர்கள், மக்கள், மற்றும் அவர் தம் பண்பாடுகள், உயிர்த்திருந்த உயிரினங்கள், தாவர வகைகள் என பல சான்றுகள் என பல செய்திகள் சங்க இலக்கிய பாடல்களால் அறிய முடிகிறது. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை போன்ற இலக்கியங்கள் பொதிகை மலை பற்றியும், பொதிகை மலை வாழ் மக்கள், பிற உயிர்கள் பற்றியும் விளம்புகின்றன.

**பொதிகை மலையின் ஆயண்டிரன்**

*கடையேழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் ஆண்டிரன் ஆய்க்குடியில் வாழ்ந்த சிறப்பாக ஆட்சி செய்த குறுநில மன்னன். ஆய் ஆண்டிரன் ஆண்ட பகுதி என்பதால் ஆய்க்குடி எனும் பெயர் அமைந்ததாக இலக்கியங்களால் அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்கள் நற்றிணை (167) குறுத்தொகை (84) அக நானூறு (69,152,198) புறநானூறு (127,136,240-41) ஆகிய நூல்களில் ஆய் ஆண்டிரன் ஆட்சி புரிந்த ஆய்க்குடி என்ற பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இந்த ஆய்குடி பகுதி என்பது ஆய் அண்டிரன் ஆட்சி செய்த மலை நாடான பொதிகை மலையாகும். ஆயண்டிரன் ஆட்சி செய்த பொதிகை மலை* ***மழை தவழ் பொதியில், பொது மீக்கூற்றத்து*** *நாடு,* ***விடர்முகை அடுக்கம்*** *என்ற பல பெயர்களால் சங்க இலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ளன.*

**மழை தவழ் பொதியில்**

*சங்க காலத்தில் பொதியில் நாடு* ***மழை தவழ் பொதியில்*** *என்று பதிவிடப்பட்டுள்ளது. அதனை,*

***மன்றப் பலவின் மாச்சினை மந்தி***

***இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்***

***பாடின் தெண்கண் கனி செத்து அடிப்பின்***

***அன்னச் சேவல் மாறு எழுந்து ஆலும்***

***கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்***

***ஆடுமகள் குறுகின் அல்லது***

***பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே(புறம். பா.எ.128)***

*என்ற பாடல் மூலம் அறியலாம். ஆய் அண்டிரன் பொதியில் நாட்டு அரசன். அந்நாட்டில் பொருள் பெற்றுவரச் செல்வோர் விசித்துக் கட்டிய தம் முழவுப் பறையை அந்நாட்டும் பலா மரங்களில் தொங்கவிடுவர். அதனை அங்குள்ள குரங்கு முழக்கும்போது அங்குள்ள அன்னங்களின் ஆண் பறவைகள் இசை கேட்டு மகிழ்ச்சியோடு ஆடும். இத்தகைய இயற்கை வளம் கொண்டது ஆய் அண்டிரனின் பொதிகை மலை. இங்கு பொதிகை மலை* ***மழை தவழ் பொதியில்*** *என்று சுட்டப்பட்டுள்ளது. குரங்குகள், ஆண் அன்னப்பறவைகள் போன்ற விலங்குகள், பறவைகள் இருந்துள்ளன. தாவர வகையுள் ஒன்றான பலாமரங்கள், முழவுப் பறையை இசைகின்ற இசைஞர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர் என்ற செய்திகளால் அன்றிருந்த பொதிகை மலையின் இயற்கை சூழலியலை உணரமுடிகின்றது.*

**பொது மீக்கூற்றத்து நாடு**

சங்க காலத்தில் பொதியில் நாடு 'பொதுமீக்கூற்றம்' என்று பதிவிடப்பட்டுள்ளது. அதனை,

**பற்றல் தேற்றாப் பயங் கெழு தாயமொடு,**

**அன்ன ஆக, நின் ஊழி; நின்னைக்**

**காண்டல் வேண்டிய அளவை வேண்டார்**

**உறு முரண் கடந்த ஆற்றல்**

**பொது மீக்கூற்றத்து நாடு கிழவோயே( புறம். பா.எ. 135)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது. **பொது மீக்கூற்றம்** என்பது மேற்குத் தொடர்ச்சி மலையின், தென் பகுதியாகிய பொதிகை மலையைச் சூழ்ந்த நாடு. அதன் அரசன் ஆய் அண்டிரன். ஆய் அண்டிரன் கொடையில் சிறந்தவன். புறநானூற்றுப் பாடலில், பொன் போன்ற நரம்புடைய யாழை இசைத்து, தளர்ந்த நடையோடு, வருந்திய உள்ளத்தோடு, பலரும் புகழும் உன்னை நாடி வந்துள்ளேன். பரிசில் வேண்டுவோரை மன்றத்தில் கண்டால் யானைகளையும் அதன் கன்றுகளோடு வழங்குவாய் என்கின்றனர். குதிரை, தேர் ஆகியவற்றையும் நீ வழங்குவாய். பாணர், பாடுநர் ஆகியோருக்கும் வழங்குவாய். உன் மூதாதையர் விட்டுச்சென்ற தாயத்தையும் வழங்குவாய். இப்போது வழங்கவேண்டியது உன் விருப்பம் என்று பாடல் அமைந்துள்ளது. ஆய் அண்டிரனின் வள்ளல் தன்மை மட்டுமல்லாது, பொதிகை மலையில் உள்ள வரிப்புலி, யானை, குதிரை முதலிய விலங்குகள் இருந்துள்ளன என்ற செய்தியும், மக்களும் மன்னரும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர் என்ற செய்தியும், அன்றிருந்த பொதிகை மலையின் இயற்கை சூழலியலையும் இப்பாடல் வரிகள் பதிவிடுகின்றன.

**விடர்முகை அடுக்கம்**

சங்ககாலத்தில் பொதியில் நாடு **விடர்முகை அடுக்கம்** என்று சுட்டப்பட்டுள்ளது. அதனை,

**புலிப்பல் தாலிப் புன்றலைச் சிறாஅர்**

**மான்கண் மகளிர்க்கு ஆன்றோர் அகன்துறைச்**

**சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை**

**விடர்முகை அடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்**

**புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்**

**இருங்கேழ் வயப்புலி வரிஅதள் குவைஇ**

**விருந்துஇறை நல்கும் நாடன் எங்கோன்** (புறம். பா.எ.374)

இப்பாடலில், புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், ஞாயிற்றைப் பார்த்து பாடுவதாக பாடல் அமைந்துள்ளது. வானத்தில் செல்லும் ஞாயிறே! நீ ஆய் அண்டிரனைப் போல வள்ளன்மை உடையவனா? என்று கேட்பதாக பாடல் அமைந்துள்ளது. அகன்ற நீர்த்துறையில் தம் வில்லால் கொன்ற முள்ளம்பன்றியின் கொழுவிய தசைத்துண்டுகள், மலைப்பிளவுகளையும் குகைகளையுமுடைய மலைப்பக்கத்தில் பெரிய கிளைகளுடன் கூடிய சந்தனமரக்கட்டை, புள்ளிகள் பொருந்திய முகமுடைய யானையின் தந்தம் ஆகிய மூன்றையும், வலிய புலியின் கரிய நிறக்கோடு அமைந்த தோலில் குவித்து விருந்தினர்க்கு அளிப்பார்கள். எங்கள் மன்னன், கழல் அணிந்த தொடியை உடைய ஆய் அண்டிரன் அத்தகைய நாட்டிற்குத் தலைவன். ஞாயிறே, நீ வானில் வெறிதே செல்கின்றாயே! நீ அவனைப் போல வள்ளல் தன்மை உடையவனா? என்று இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில் **விடர்முகை அடுக்கத்து** என்ற வரிகள் ஆய் அண்டிரன் ஆட்சி செய்த பொதிகை மலையைச் சுட்டுகிறது. மேலும் அம்மலையில் புல்வாய் என்ற ஆண்மான், கலைமான்கள், முள்ளம் பன்றி, யானைகள், புலிகள், குறிஞ்சி மரம், சந்தன மரம், மலைப்பிளவுகளையும் குகைகள் போன்றவையெல்லாம் இருந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. மேலும் அங்கு வாழும் மக்கள் இசைப்பயிற்சி பெற்றவர்களாயிருந்துள்ளனர். விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியுள்ளனர் போன்ற பல செய்திகளைப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. பொதிகை மலையில் மன்னர்களும் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளனர் என்பதை இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது.

மலை என்பது ஒரு உயர்ந்த மலைப்பகுதியை மட்டுமல்லாது, அங்கு ஆட்சி செய்யும் மன்னன், மக்கள் முதற் கொண்டு காடுகள், நீர் வீழ்ச்சிகள், ஆறுகள், மூலிகைகள், மருத்துவத் தாவரங்கள், விலங்குகள் என்ற அனைத்தையும் தன்னகத்தே கொண்ட பல்லுயிர் வேற்றுமை மண்டலமாகும். இவை அனைத்தையும் தன்னில் அடக்கியதாக ஆயண்டிரன் ஆட்சி செய்த பொதிகை மலை அமைந்துள்ளது.

**முடிவுரை:**

சங்க காலத்தில் சுட்டப்பட்டுள்ள பொதிகை மலை ஆய் அண்டிரன் ஆட்சி செய்த மலையாகவும், இயற்கை சூழல் மிகுந்த மலையாகவும் இருந்துள்ளது. அன்று வாழ்ந்த மன்னர்களும், மக்களும் சூழலியல் சிந்தனை மிகுந்தவர்களாக வாழ்ந்துள்ளனர். எனவே இந்தியாவின் மேற்குத்தொடர்ச்சிமலையும், மேற்குத்தொடர்ச்சிமலையின்

தென்பகுதியில் ஆனைமலைத் தொடரில் அமைந்துள்ள அகத்தியர் மலை என்று அனைவராலும் அழைக்கப்படுகின்ற பொதிகை மலையும், சங்க காலம் முதல் தற்காலம் வரை வீரத்துடனும் ஈரத்துடனும் ஆட்சி செய்த மன்னர்களின் பெருமையை இயம்புகின்ற நிலையில் இன்றும் பரந்து விரிந்து உயர்ந்து நிற்கின்றது.

**முதன்மை நூல்**


1. *புறநானூறு, மூலமும் உரையும், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு — 2010.*

   *Puranaanuru mulamum uraiyum, puliyur sesigan, saarathaa pathippagam, Chennai-14, first edition-2010*
2. *சாமிநாதையரவர்கள். உ. வே. புறநானூறு, மூலமும் பழைய உரையும், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே.சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு, சென்னை-46. ஏழாம் பதிப்பு-1971*

   *Saaminaathaiyar. U.ve., puranaanuru mulamum palaiya uraiyum, u.ve. saamithaiyar nool nilaiyam veliyidu, Chennai-46. Seventh edition*


**துணை நூற் பட்டியல்**


1. *ஔவை சு துரைசாமிப் பிள்ளை, புறநானூறு பாட்டுக்கள், திருநேல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, முதற்பதிப்பு 1968.*

   *Avai su thuraisaamipillai, puranaanuru paatukal, thirunelveli thenninthiya saivasiththantha noor pathippu kazagam, Chennai-1, first edition 1968*
2. *இராசமாணிக்கனார்.,மா, தமிழர் வரலாறும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2011*

   *Rasamaanikkanaar.maa, thamilar varalaarum panpaadum, saarathaa pathippakam, Chennai,first edition 2011*
3. *சண்முகதாஸ்.எ., சங்க இலக்கிய ஆய்வுகள், (க. கைலாசபதி நினைவுமலர்) தேசியகவி இலக்கியப்பேரவை, கொழும்பு,2002.*

   *Sanmugathas .e., sanga ilakkiya aayvukal, ka. Kailasapathi ninaivu malar, thesiya kavi ilakkiya peravai, kolumbu,2002*
4. *வேங்கடராமன். கா.கோ., தமிழ் இலக்கிய வரலாறு, கலியக வெளியீடு, சென்னை,நான்காம் பதிப்பு-2006*

*Vengadaraaman.ka.ko., thamiz ilakkiya varlaaru, kaliya veliyidu, Chennai, forth edition 2006*

5. சங்க இலக்கியம் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் சைவ சித்தாந்த மகா சமாஜம் திருவருளகம், மயிலாப்பூர், சென்னை. முதற்பதிப்பு-1940

   *Sanga ilakkiyam ettuthokaiyum paththupaattum saiva siththantha maka samajam, thiruvrulakam, mayilapoor, Chennai, first edition-1940*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com